சுருக்கம்

நிலம்– வீட்டுமனைப்பட்டா–அரசு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வீடுகள் கட்டி குடியிருப்போரின் ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனை பட்டா வழங்கும் சிறப்புத்திட்டம்–31.3.2008 உடன் முடிவடைந்தது –30.9.2008 வரை நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய்த்துறை-G.O.(2)துறை

அரசாணை (நிலை) எண்.241 நாள்:9.5.2008

படிக்கவும்:

1. அரசாணை (நிலை) எண்.854 வருவாய்த்துறை, நாள். 30.12.06
2. அரசாணை (நிலை) எண். 493 வருவாய்த்துறை, நாள் 5.9.2007.
3. அரசாணை (2டி) எண். 711 வருவாய்த்துறை, நாள் 30.11.2007.
4. அரசாணை (நிலை) எண். 34 வருவாய்த்துறை, நாள் 23.1.2008.

16997/07

3/7508

ஆணை:

அரசு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து அதற்கான ஆதாரங்களை சமர்ப்பித்தவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு, உள்ளாட்சி மன்றங்களின் தீர்மானங்களை பெற்று, ஆக்கிரமிப்பாளர்களின் தகுதியின் அடிப்படையில், அவ்வாக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப்பட்டா வழங்கும் ஒருமுறை சிறப்புத்திட்டம், பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அரசால் நடைமுறைப் படுத்தப்பட்டது. இத்திட்டம் சனவரி 2007 முதல் ஆறுமாத காலத்திற்கு மட்டும் நடைமுறைப்படுத்தப்படும் என ஆணையிடப்பட்டது.

2. மேலும் பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் இத்திட்டம் 31.3.2008 வரை நீட்டிக்கப்பட்டு அதிக அளவில் பயனாளிகள் பயனடைய வேண்டும் என்பதற்காக இவ்வரசாணையில் பல அதிகாரங்கள் மாவட்ட [illegible] வழங்கப்பட்டது. [illegible] முன்னுரை படிக்கப்பட்ட அரசாணையில் இச்சிறப்புத் திட்டத்திற்கு மட்டும் இலவச வீட்டுமனைப்பட்டா பெறுவதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பு நீக்கப்பட்டு, முற்றிலும் இலவசமாகவே வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும் எனவும், ஏற்கனவே இத்திட்டத்தின் மூலம் வீட்டுமனை பெற்ற பயனாளிகள் 30.12.2006 முதல் வீட்டுமனைப்பட்டா பெறுவதற்கு செலுத்திய தொகை அவர்களுக்கே, உரிய ஆய்விற்கு பின் திருப்பி வழங்கப்படும் என்றும் இச்சிறப்புத்திட்டத்தின் கீழ் மக்கள் அதிக அளவில் பயன்பெற வேண்டும் என்பதற்காக வீட்டுமனை ஒப்படைக்கான வரம்பு கிராமப்புறங்களில் 4 சென்ட், நகராட்சிப்பகுதிகளில் 2 1/2 சென்ட் மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் 2 சென்ட் என்றும் விரிவுபடுத்தி ஆணையிடப்பட்டது. மேலும் பார்வை நான்கில் படிக்கப்பட்ட அரசாணையின் மூலம் இச்சிறப்புத்திட்டம் 5 ஆண்டுகள் அரசு நிலங்களில் வீடுகட்டி குடியிருப்பவர்களுக்கும் பொருந்தும் எனவும் ஆணையிடப்பட்டது.

3. மேற்காணும் சூழ்நிலையில், இச்சிறப்புத் திட்டத்தின் கீழ் மேலும் அதிக அளவில் மக்கள் பயன்பெற வேண்டுமென்பதற்காக இத்திட்டத்தை 30.9.2008 வரை நீட்டிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அம்புஜ் சர்மா
அரசு செயலாளர்.

பெறுநர்:

சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை–5
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்துத்துறை செயலாளர்கள், தலைமைச்செயலகம், சென்னை–9

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9
செயலர் வருவாய்த்துறை, சென்னை–9.
இ.கோ/ உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அதிகாரி 9/5/08

JUN-16-08 04:38 COLLR VNR